**மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை**

**O.S. No. 173 / 2022**

**பி.வா.சா.1 – பாக்கியம்** **09.09.2025**

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

தாவா சொத்தின் சர்வே எண் 150/7 ஆகும். அதன் விஸ்தீரணம் 74 செண்டு ஆகும். அந்த 74 செண்டும் முத்திருளப்ப பிள்ளைக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். முத்திருளப்ப பிள்ளைக்கு நடராஜன், மாதவன் ஆகியோர் வாரிசுகள் என்றால் சரிதான். முத்திருளப்ப பிள்ளை உயிருடன் இருந்த போது தாவாசொத்தை பாகப்பிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் சரியல்ல. முத்துருளப்ப பிள்ளை இறந்த பின்பு மாதவனும், நடராஜனும் தாவா சொத்து தலா 37 செண்டுகளாக பிரித்துக் கொண்டார்கள். அதில் மாதவனுக்கு வடபுறம் உள்ள 37 செண்டு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். மாதவனுக்கு ஒதுக்கப்பட்ட 37 செண்டை நான் 10.04.1976ல் கிரையம் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். நான் கிரையம் வாங்கிய அந்த கிரைய பத்திரத்தில் நடராஜன் பாகத்திற்கும் வடக்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். முத்திருளப்பபிள்ளை 19.02.1981ல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். முத்திருளப்பபிள்ளை உயிருடன் இருந்த போதே நான் மாதவனிடம் 37 செண்டை கிரையம் வாங்கினேன் என்றால் சரிதான். நான் நடராஜனிடம் 24.061982 ல் ஒரு வெண்ணிலை கிரைய அக்ரிமெண்ட் 37 செண்டை பொறுத்து ஏற்படுத்திக்கொண்டேன் என்றால் சரிதான். அந்த வெண்ணிலை கிரைய அக்ரிமெண்ட்டில் ஆனி மாதம் 10ம் தேதி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த கிரைய அக்ரமெண்ட்டில் ஆடி மாதம் 15ம் தேதிக்குள் பாக்கி ரூ.760/– செலுத்தி பத்திரம் பதிவு

செய்ய வேண்டும் என்றும் கொடுக்க தவறினால் நான் கோரும் இழப்பிற்கு நடராஜன் பொறுப்பல்ல என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் 16.08.1982 ல் ஆடி மாதம் 31ம் தேதி எனது குடும்ப சூழ்நிலை காரணமாக ஒப்பந்த தேதிக்குள் பத்திரம் பதிவு செய்ய முடியவில்லை அதனால் நான் கொடுத்த அட்வான்ஸ் தொகை ரூ.1500/– திரும்ப பெற்றுக்கொண்டதாக ரசீது எழுதி நடராஜனிடம் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் அட்வான்ஸ் தொகையை திரும்ப பெற்றுக்கொண்டதால் அந்த வெண்ணிலை கிரைய அக்ரிமெண்ட் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. இதற்கிடையில் நடராஜனுக்கு பாத்தியப்பட்ட 37 செண்டையும் சேர்த்து பட்டா வாங்கியுள்ளேன் என்றால் நடராஜனின் முழு சம்மதத்துடன் பட்டா வாங்கியுள்ளேன். நான் நடராஜனின் சம்மதத்துடன் பட்டா மாற்றவில்லை மோசடியாக பட்டா மாற்றியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் பட்டா மாற்றியதால் அந்த பட்டாவை ரத்து செய்ய நடராஜன் மாவட்ட வருவாய் அலுவலரிடம் மனு கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அந்த மனுவில் நான் ஆஜராகி எதிர்வாதம் செய்தேன் என்றால் சரிதான். மாவட்ட அலுவலர் விசாரணையில் 03.12.2012ல் எனது பெயரிலும் நடராஜன் பெயரிலம் தாவா சொத்துக்கு கூட்டுப்பட்டா ஏற்படுத்த உத்திரவிடப்பட்டது என்றால் சரியல்ல. மாவட்ட வருவாய் அலுவலர் நடராஜன்கு ஆதரவாக உத்திரவு பிறப்பித்தார். நான் அதனை எதிர்த்து மதுரை உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தேன். அந்த மேல்முறையீட்டு நகலை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. நான் மேல்முறையீடு செய்யவில்லை வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல

மாவட்ட வருவாய் அலுவலரின் உத்திரவை மறைத்து எனது மகன் 2ம் பிரதிவாதி குமரேசனுக்கு 12.10.2011 ல் ஒரு தான செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளேனா என்றால் உத்திரவை மறைத்து எழுதிக்கொடுத்துள்ளேன். நான் எனது மகனுக்கு தான செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்தவுடன் நடராஜன் 16.11.2011ல் மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். 19.11.2011ல் மாவட்ட ஆட்சித்தலைவரிடம் நடராஜன் மனுக்கொடுத்தார் என்றால் சரிதான். மாவட்ட வருவாய் அலுவலரின் உத்திரவின்படி பட்டா வழங்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சித்தலைவர் உத்திரவு பிறப்பித்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மாவட்ட ஆட்சித்தலைவரின் உத்திரவு தெரிந்து நான் மானாமதுரை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் வழக்கு தாக்கல் ெ◌ சய்தேன், ஆனால் மாவட்ட ஆட்சித்தலைவரின் உத்திரவு தெரிந்து நான் வழக்கு தாக்கல் செய்யவில்லை. நான் தாக்கல் செய்த அந்த வழக்கில் நடராஜன் தான் பிரதிவாதி. அந்த வழக்கு எண்.41/2013 என்றால் சரிதான். அந்த வழக்கு 17,08,2015ல் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த வழக்கு தாவா சொத்து எனக்கு பாத்தியம் என்று தாக்கல் செய்தேன். அந்த வழக்கில் நான் விளம்புகை பரிகாரம் கோரவில்லை நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டும் கோரியிருந்தேன் என்றால் சரியல்ல. அந்த வழக்கின் தீர்ப்பின் மீது நான் இந்த நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு வழக்கு எண் 9/2021 தாக்கல் செய்து அது 11.07.2022ல் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த தீர்ப்பில் நான் மாதவனிடம் வாங்கிய 37 செண்டு மட்டும்த நா ன் எனக்கு பாத்தியம் என சொல்லப்பட்டிருந்தது என்றால் சரியல்ல. நான் எனது மகனுக்கு

எழுதிக்கொடுத்த தான செட்டில்மெண்ட் ஆவத்தை ரத்து செய்ய கோரி நடராஜன் மானாமதுரை சார் பதிவாளருக்கு 07.09.2022 ல் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மானாமதுரை சார்பதிவாளர் 27.10.2022ல் ஒரு குறிப்பாணை நடராஜனுக்கு அனுப்பிய விபரம் எனக்கு தெரியாது. அந்த குறிப்பாணையில் பதிவு செய்யப்பட்ட ஆவணத்தை ரத்த செய்ய நீதிமன்றம் மூலம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த அடிப்படையில் தான் வாதிகள் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் எதிர்கோருரிமையில் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும் வாதிகள் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு அனுமதிக்கப்படவேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல

**3ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :–**

12.10.2011ல் தாவா சொத்து சம்மந்தமாக நான் எனது மகனுக்கு தான செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். சார்பதிவாளர் நான் தாக்கல் செய்த ஆகூணங்களை பரிசீலனை செய்து சட்ட விதிகளை பின்பற்றி நான் எனது மகனுக்கு எழுதிக்கொடுத்த தான செட்டில்மெண்ட் ஆவணத்தை பதிவு செய்தார் என்றால் சரிதான்.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
மானாமதுரை